Presented on : 03-02-2024
Registered on : 03-02-2024
Decided on : 17-06-2026
Duration : 2 years, 4 months, 14 days

**நீதித்துறை நவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை: திரு.J.ராஜ்குமார், B.A., LL.B.,**

**நீதித்துறை நடுவர் எண்.1, பவானி**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 3ம் நாள்

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 17ம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.15/2024**

மாநில அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
ஆப்பக்கூடல் காவல் நிலையம்,
ஆப்பக்கூடல்.
(குற்ற எண். 163/2023). ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

சிவா (23/2023)
த/பெ.சின்னராஜ் ... எதிரி

Case Summary

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>ஆப்பக்கூடல் காவல் நிலையம்,<br>ஆப்பக்கூடல்.<br>(குற்ற எண். 163/2023). |
| 2. | எதிரியின் பெயர் | சிவா (23/2023)<br>த/பெ.சின்னராஜ் |
| 3. | எதிரியின் முகவரி | பறைதோட்டம், நல்லநாய்கனூர், புன்னம், பவானி. |
| 4. | எதிரியின் வயது | 23/2023 |
| 5. | குற்ற நிகழ்வு நாள் | 22.10.2023 |
| 6. | புகார் தேதி | 23.10.2023 |
| 7. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி | N/A |



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.17 17:01:20 +0530

<table>
<tr><td>8.</td><td>எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">Station Bail</td></tr>
<tr><td>9.</td><td>Commitment</td><td colspan="3">N/A</td></tr>
<tr><td>10.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">Surrender petition in CMP.No.2879/2024 and allowed on 26.04.2024</td></tr>
<tr><td rowspan="6">11.</td><td rowspan="6">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>11.11.2025</td><td>11.11.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>11.11.2025</td><td>11.11.2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>28.01.2026</td><td>28.01.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>20.02.2026</td><td>20.02.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>03.06.2023</td><td>03.06.2023</td></tr>
<tr><td>12.</td><td>விசாரணை முடிக்கப்பட்ட தேதி</td><td colspan="3">03.06.2026</td></tr>
<tr><td>13.</td><td>தண்டனை அல்லது உத்தரவு</td><td colspan="3">17.06.2026</td></tr>
<tr><td>14</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">17.06.2026</td></tr>
<tr><td>15</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="3">அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம்</td></tr>
</table>

இவ்வழக்கு கடந்த 03.02.2024ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. வெங்கிடுசாமி மற்றும் D.பிரகாஷ் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

**1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்**

கடந்த 22.10.2023ம் தேதி இரவு 7 மணிக்கு ஆப்பக்கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சுக்காநாயக்கனூர், பெரியதொட்டிபாளையம், பொம்முராஜ் காட்டுக்கு



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.17 17:01:24 +0530

எதிரில் ஆப்பக்கூடலிலிருந்து புன்னம் செல்லும் சாலையில் இவ்வழக்கில் இறந்துபோன மயில்சாமி என்பவர் TN 36 J 5220 என்ற இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இடதுபுற ஓரமாக ஓட்டி சென்றபோது, மேற்படி சாலையில், மேற்படி திசையில், அவரின் வண்டிக்கு பின்னால் எதிரி, TN 65 C 1902 என்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று, மேற்படி மயில்சாமி ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில், மேற்படி மயில்சாமிக்கு தலையிலும் இடது பக்க தோள்பட்டையிலும் காயங்கள் ஏற்பட்டதன் விளைவாக மரணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், எனவே, எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 304–Aன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, ஆப்பக்கூடல் காவல் நிலைய, காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச.பிரிவு 207ன் கீழ், எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழ் குற்றச்சாட்டினை வனைந்து கு.வி.மு.ச. பிரிவு 240ன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>

கடந்த 22.10.2023ம் தேதி இரவு 7 மணிக்கு ஆப்பக்கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சுக்காநாயக்கனூர், பெரியதொட்டிபாளையம், பொம்முராஜ் காட்டுக்கு எதிரில் ஆப்பக்கூடலிலிருந்து புன்னம் செல்லும் சாலையில் இவ்வழக்கில் இறந்துபோன மயில்சாமி என்பவர் TN 36 J 5220 என்ற இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இடதுபுற ஓரமாக ஓட்டி சென்றபோது, மேற்படி சாலையில், மேற்படி திசையில், அவரின் வண்டிக்கு பின்னால் எதிரி, TN 65 C 1902


RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.17 17:01:27 +0530

என்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று, மேற்படி மயில்சாமி ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில், மேற்படி மயில்சாமிக்கு தலையிலும் இடது பக்க தோள்பட்டையிலும் காயங்கள் ஏற்பட்டதன் விளைவாக மரணத்தை ஏற்படுத்தியுள்ளார்.

4.2 கடந்த 22.10.2023ம் தேதியன்று ஆப்பக்கூடல் காவல் நிலைய தலைமை காவலர் சின்னண்ணன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபொழுது, அந்தியூர் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பட்ட முத்துசாமி என்பவரது மகன் மயில்சாமி என்பவரது REFER TO GEMCH என்ற RTA இன்டிமேஷனை பெற்று பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, மேற்படி பழனிச்சாமி என்பவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் இருந்ததால் அவரிடம் வாக்குமூலம் பெற இயலாமல் மறுநாள் 23.10.2023-ம் தேதி மேற்படி மயில்சாமி என்பவர் தலையில் அறுவை சிகிச்சை செய்து மயக்க நிலையில் இருந்ததால், அவரது மகள் சாவித்திரி என்பவரை விசாரித்து அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து நிலைய குற்ற எண் 163/ 2023, இ.த.ச. பிரிவுகள் 279, 337 கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும்

4.3 பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் குப்புசாமி என்பவர் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான குப்புசாமி மற்றும் முத்து நாயக்கர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜரும், அ.சா.ஆ.4 மாதிரி படமும் தயார் செய்தும், பின்னர் சாட்சிகள் சாவித்திரி, தேவராஜ், தம்பி, கலையான், மல்லிகா, மாரிமுத்து, குப்புசாமி மற்றும் முத்து நாயக்கர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விபத்தில் காயம்பட்ட மயில்சாமி என்பவர் கடந்த 30.10.2023 ம் தேதியன்று சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக கிடைத்த இறப்பு இன்டிமேஷனை பெற்று வழக்கின் சட்ட பிரிவை இ.த.ச பிரிவுகள் 279, 337லிருந்து இ.த.ச பிரிவுகள் 279, 304-A ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும், பின்னர் தொடர்பு புலன் விசாரணைக்காக அ.சா.5 கிருஷ்ணமூர்த்தி பவானி வட்டக்காவல் ஆய்வாளரிடம் ஒப்புவித்துள்ளார்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.17 17:01:31 +0530

4.4 வழக்குக் கோப்பை பெற்ற அ.சா.5 சம்பவ இடம் சென்று பார்வையிட்ட போது, சம்பவ இடம் மாதிரி வரைபடத்துடன் ஒத்திருந்ததால் புதியதாக எதுவும் தயார் செய்யவில்லை என்றும், சாட்சிகளை விசாரித்த போது அவர்கள் மேற்படி உதவி ஆய்வாளரிடம் கூறியதையே தன்னிடமும் கூறியதால், புதியதாக வாக்குமூலம் எதுவும் தயார் செய்யவில்லை என்றும், பின்னர், ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு பஞ்சாயத்துதாரர்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் விபத்தில் இறந்துபோன மயில்சாமி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்து அ.சா.ஆ.5 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தும், பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான சரவணன், சண்முகம், தமிழரசு மற்றும் சரத்குமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரியை தேடி வந்த நிலையில் 10.11.2023 ஆம் தேதியன்று ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி சிவா என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், தக்க நிலைய பிணையில் விடுவித்தும், பின்னர் சாட்சிகள் சண்முகம் மற்றும் நவீன் குமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4.5 விபத்தில் தொடர்புடைய வாகனங்களின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்து 12.11.2023ம் தேதியன்று சாட்சிகள் ராஜி மற்றும் அழகேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், 30.11.2023ஆம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளர் சுரேந்திர குமார் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.6 TN 65 C 1902 என்ற மோட்டார் வாகன ஆய்வறிக்கை, அ.சா.ஆ.7 TN 39 J 5220 என்ற TVS இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றும், பின்னர் அந்தியூர் அரசு மருத்துவமனையில் இறந்துபோன மயில்சாமி என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவர் விஜயா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.ஆ.8 விபத்து பதிவேடு பெற்றும், பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.ஆ.9 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றும், பின்னர் எதிரி சிவா என்பவருக்கு சிகிச்சை அளித்த அந்தியூர் பாலாஜி மருத்துவமனை மருத்துவர் சண்முகசுந்தரம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.ஆ.10 காயச்சான்று பெற்றும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.17 17:01:33 +0530

கடந்த 30.11.2023ம் தேதியன்று எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304−A கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என அரசு தரப்பு சாட்யம் முடித்துக்கொள்ளப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரியை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி என்று கூறினார். இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்று கூறினார். எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது இல்லை என்று கூறினார்.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவுகள் 279, 304 − Aன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

7. **<u>தீர்வு</u>**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் கடந்த 22.10.2023ம் தேதி இரவு 7 மணிக்கு ஆப்பக்கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சுக்காநாயக்கனூர், பெரியதொட்டிபாளையம், பொம்முராஜ் காட்டுக்கு எதிரில் ஆப்பக்கூடலிலிருந்து புன்னம் செல்லும் சாலையில் இவ்வழக்கில் இறந்துபோன மயில்சாமி என்பவர் TN 36 J 5220 என்ற இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இடதுபுற ஓரமாக ஓட்டி சென்றபோது, மேற்படி சாலையில், மேற்படி திசையில், அவரின் வண்டிக்கு பின்னால் எதிரி, TN 65 C 1902 என்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று, மேற்படி மயில்சாமி ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில், மேற்படி மயில்சாமிக்கு தலையிலும் இடது பக்க தோள்பட்டையிலும் காயங்கள் ஏற்பட்டதன் விளைவாக மரணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என தீர்மானித்து அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார்.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.17 17:01:37 +0530

8. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து நடைபெறவில்லை என்றும், இவ்வழக்கில் இறந்துபோன மயில்சாமி சாலையில் வரும் வாகனத்தை கவனிக்காமல் அவரது இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றதால் மேற்படி விபத்து ஏற்பட்டதாக சாட்சிகள் குறிப்பிட்டு சாட்சியமளிக்காத நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

9. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304 – A ன் கீழ் குற்றம் நிரூபணம் செய்யப்பட ஒருவர் இறந்திருக்க வேண்டும், அந்த இறப்பானது எதிரியால் ஏற்பட்டிருக்க வேண்டும், எதிரி தனது வாகனத்தில் அசட்டை துணிவான செயல் அல்லது கவனக்குறைவாக ஓட்டி வருவதன் மூலம் யாரேனும் ஒருவருக்கு கொலைக்கு நிகராக மரணத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

10. இவ்வழக்கில் அரசு தரப்பு முதலாவதாக விபத்து ஏற்படுத்திய வாகனம் அடையாளப்படுத்தப்படும், இரண்டாவதாக விபத்து ஏற்படுத்திய வாகனத்தை எதிரி தான் அதிவேகமாகவும், அல்லது கவனக்குறைவாகவும் ஓட்டினார் என்றும், மூன்றாவதாக எதிரி வாகனத்தை அவ்வாறு ஓட்டி கொலைக்கு நிகராக மரணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும்.

11. இவ்வழக்கில் அ.சா.1 சாவித்திரி புகார்தாரராகவும், அ.சா.2 தேவராஜ், அ.சா.3 தம்பிகலையன் (எ) சேகர் கண்ணுற்ற சாட்சியாகவும், அ.சா.4 குப்புசாமி பார்வை மகஜர் சாட்சியாகவும், அ.சா.5 கிருஷ்ணமூர்த்தி புலான்விசாரணை அதிகாரியாக அரசு தரப்பில் முன்னிலைபடுத்தப்பட்டுள்ளனர்.

12. குற்ற வழக்குகளில், அரசு தரப்பு தாம் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டியது என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். எதிரி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாலேயே அவர் குற்றவாளி ஆகிவிடமாட்டார். குற்றச்சாட்டை ஆதரிக்கும் நம்பகமான, ஒருமித்த மற்றும் சட்டபூர்வமான சாட்சியங்கள் நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும். மேலும், சாட்சியங்களில் சந்தேகம் அல்லது முரண்பாடு இருந்தால் அதன் பயன் எதிரிக்கே



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.17 17:01:40 +0530

வழங்கப்பட வேண்டும் என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். மேலும், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் படி, ஒரு குறிப்பிட்ட உண்மையை நிரூபிக்க வேண்டிய சுமை (Burden of Proof) அந்த உண்மையை கூறுகின்ற தரப்பினரிடமே உள்ளது. குற்ற வழக்குகளில் எதிரி குற்றம் செய்துள்ளார் என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டிய கடமை முழுமையாக அரசு தரப்பினரிடமே உள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**13. இ.த.ச பிரிவு 279ன் கீழ்கண்டவாறு கூறிகிறது.**

பொது பாதையில் முரட்டுத்தனமாக ஓட்டுதல் அல்லது சவாரி செய்தல், மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் விதமான அல்லது வேறு எவருக்கேனும் காயம் அல்லது கேடு விளைவிக்கக்கூடிய அத்தகைய வகையிலும் பொதுப்பாதை ஏதோவொன்றிலும் வண்டி எதையும் முரட்டுத்தனமாக அல்லது கவனக்குறைவாக ஓட்டுகிற அல்லது சவாரி செய்கிற எவறாயினும் 6 மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறை தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது ஓர் ஆயிரம் வரை நீடிக்கக்கூடிய அபராதமும் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப் படவேண்டும்.

13.1 மேற்படி பிரிவின்படிக்கு முதலாவது மற்றும் இரண்டாவது உட்கூறான எதிரி TN 36 J 5220 என்ற இருசக்கர வாகனத்தை பொதுப்பாதையில் இயக்கினாரா என்று பரிசிலனை செய்கையில், அரசு தரப்பு சாட்சிகள் விபத்தானது பெரியதொட்டிபாளையம், பொம்மிராஜ் காட்டுக்கு எதிரில் நடந்ததாக குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளனர். மேலும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பார்வை மகஜர் அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடத்தின் மூலம் சம்பவ இடமானது ஆப்பக்கூடலிலிருந்து புன்னம் ரோட்டில், பெரியதொட்டிபாளையம், பொம்மிராஜ் காட்டுக்கு எதிரில் பொதுயிடம் என்பதும், தேதி மற்றும் நேரத்தில் எதிரிதான் வாகனத்தை இயக்கினாரா என்று இருதரப்பிலும் எந்த ஐயப்பாடும் இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது.

13.2 மேற்படி பிரிவின்படிக்கு மூன்றாவது உட்கூறான எதிரி அசட்டுத்தனமான தகாதுணிச்சல் அல்லது கவனக்குறைவாக இருசக்கர வாகனத்தை இயக்கி பாவாயி என்பவருக்கு விபத்தை ஏற்படுத்தினாரா என்று பரிசிலினை செய்கையில்,


RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.17 17:01:44 +0530

இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், தனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைத்து விபத்து நடந்த இடத்திற்கு சென்ற தான் தனது அப்பாவை அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு முதலில் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றும், பின்னர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றும், 23.10.2023ம் தேதியன்று பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வந்த போலீசார் தனது அப்பா மயக்க நிலையில் இருந்ததால் தன்னை விசாரித்து அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பதிவு செய்தும், அங்கு சிகிச்சையிலிருந்த தனது அப்பா 30.10.2023 தேதியன்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், பிரேத விசாரணையின்போது தனது அப்பாவின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடன் இருந்ததாகவும் கூறிகூறி சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து அ.சா.1ன் சாட்சியம் கேள்விநிலை சாட்சியம் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

13.3 வழக்கிற்கு அடிப்படையான புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில், 22.10.2023 பதிவு செய்யப்பட்ட புகாரானது, விபத்து நடந்த மறுநாள் கொடுக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.ஆ.1 புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையானது 26.10.2023ம் தேதி இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது. மேற்படி 2 நாட்கள் காலதாமதத்திற்கு எவ்வித விளக்கமும் அரசுத்தரப்பில் தரவில்லை என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

13.4 கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 தேவராஜ் மற்றும் அ.சா.3 தம்பிகலையன் (எ) சேகர் தங்களது சாட்சியத்தில், விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், விபத்து நடைபெற்ற பிறகுதான் பார்த்ததாகவும் கூறி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளனர்.

13.5 பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 குப்புசாமி தனது சாட்சியத்தில், இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், சுக்காநாயக்கனூர் அருகில் விபத்து நடந்தது சம்பந்தமாக போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.17 17:01:46 +0530

செய்து தன்னிடம் பார்வை மகஜரில் கையெழுத்து வாங்கியதாகவும் என்று கூறி சாட்சியமளித்துள்ளார். மேலும், அவரது குறுக்கு விசாரணையில், "நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்கிற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளார்.

13.6 எனவே, மேற்படி சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.1 கேள்விநிலை சாட்சியம் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளனர் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அரசு தரப்பில் இந்நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்தும் அவர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. கேள்விநிலை சாட்சியம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 60ன் கீழ் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. பொதுவாக விபத்தை கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தோடு சாட்சியங்கள் ஒத்துப்போகிறபோதுதான் மேற்படி கேள்விப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் ஏற்புடையது என்று நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். ஆனால், கண்ணுற்ற சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காததால், அ.சா.1ன் சாட்சியமும் ஏற்புடையது அல்ல என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13.7 மேலும், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 தான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்த விவரம் தெரியாது என்றால் சரிதான் என சாட்சியம் அளித்திருப்பது ஆவணத்தின் உள்ளடக்கத்தை தெரியாமல் சாட்சியம் அளித்திருப்பது இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமையவில்லை. மேலும் அரசுத்தரப்பு சாட்சிகள் யாரும் எதிரியின் அசட்டுத்தனமான தகாதுணிச்சல் மற்றும் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

13.8 மேலும், விபத்து ஏற்படுத்திய வாகனமானது 10.11.2023ம் தேதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்பது அ.சா.ஆ.6 பரிசீலனை செய்கையில் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், விபத்து ஏற்பட்ட வாகனமானது 10.11.2023ம் தேதி ஆய்வுக்கு



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.17 17:01:51 +0530

உட்படுத்தப்பட்டது என்பது அ.சா.ஆ.7 பரிசீலனை செய்கையில் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேற்படி காலதாமதத்திற்கு அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் கொடுக்கப்படவில்லை.

13.9 மேலும், மருத்துவர் வழங்கிய அ.சா.ஆ.5 பிரேத விசாரணை அறிக்கை மற்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 திரு. கிருஷ்ணமூர்த்தி காவல் ஆய்வாளர் அவர்கள் சம்பவத்தை குறித்து புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்திருந்தாலும், சான்றாவணங்களாக மோட்டார் வாகன ஆய்வறிக்கை, பிரேத விசாரணை அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தாக்கல் செய்திருந்தாலும், அவரின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை வைத்து விபத்து நடந்த தேதி, இடம், மற்றும் நேரத்தில் எதிரியின் அசட்டுத்தனமான துணிச்சலுடன், கவனக்குறைவாகவும் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என தீர்மானிக்க இயலாது.

13.10 மாண்புமிகு உச்சநீதிமன்றம் Ravi kapur VS State of Rajasthan எனும் வழக்கில் அசட்டுத்தனமாக தகாதுணிச்சல், கவனக்குறைவாகவும் வாகனம் ஒட்டுதல் நேரடியான சாட்சியம் அல்லது சுற்றியுள்ள சூழ்நிலைகள் மற்றும் அசட்டுத்தனமாக தகாதுணிச்சல், கவனக்குறைவாகவும் வாகனம் ஓட்டுதல் அனுமானம் ஆகியவற்றின் மூலம் நிரூபணம் செய்யப்படலாம் மேலும் சுற்றியுள்ள சூழ்நிலைகள் மூலம் வழக்கானது நிரூபணம் செய்யப்படும் நிலையில் செயலே செப்பும் (Doctrine of res ipsa loquittur) என்ற முது மொழியும் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி பரிசீலனையின் அடிப்படையில், அரசு தரப்பில் எதிரியின் அசட்டுத்தனமாக தகா துணிச்சல், அஜாக்கிரதையின் காரணமாக விபத்து ஏற்பட்டது என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், செயலே செப்பும் என்கிற விதிப்படியும் அரசு தரப்பில்சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவு 279ன் படியாக உட்கூறு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகிறது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.17 17:01:54 +0530

14. இ.த.ச பிரிவு 304–A கீழ்கண்டவாறு கூறுகிறது.

அசட்டையினால் மரணம் விளைவித்தல். மரணம் விளைவிக்கும் குற்றமாகாமல் முரட்டுதனமாக அல்லது கவனக்குறைவான செய்கை எதானலேயும் எவரது இறப்பை விளைவிக்க எவரொருவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறைதண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும். மேற்படி பிரிவின்படிக்கு எதிரியின் கவனக்குறைவு அல்லது முரட்டுதனமாக செயலால் இறப்பை ஏற்படுத்தினார் என்பதை நிரூபிக்க வேண்டும்.

14.1 எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவு 304–A ன் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில், அரசு தரப்பில் மயில்சாமி என்பவர் இறந்துள்ளதை அ.சா.ஆ.9 பிரேத பரிசோதனை அறிக்கையின் மூலம் அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே இ.த.ச. பிரிவு 279ன் படி அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்படாததால், மேற்படி மயில்சாமி என்பவரின் இறப்பிற்கு எதிரியின் அசட்டுத்தனமான தகாதுணிச்சல், கவனக்குறைவு தான் காரணம் என தீர்மானிக்க இயலாது. எனவே அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவு 304–Aன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே முடிவு செய்யப்படுகின்றது.

14.2 இவ்விடத்தில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் State rep by the Inspector of Police, Aravakurichi Police Station vs Kulanthaisamy 2013 (2) MLJ (Crl) 797 என்னும் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள முன் தீர்ப்பினை சுட்டிக் காட்ட வேண்டியது அவசியமாகிறது Cannot be general Presumption and that person should have driving motor vehicle in rash and negligent manner merely because there was Accident என சுட்டிக்காட்டி உள்ளதும் எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி வந்து இறப்பை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிருபணம் செய்யப்படவில்லை என்ற சட்ட நிலைப்பாடு இந்த வழக்கின் பொருண்மைக்கு பொருந்துவதாக உள்ளது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.17 17:02:01 +0530

15. **முடிவாக,** எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் எந்தவிதமான ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாத நிலையில் எழும் ஐயத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை **இ.த.ச. 279, 304–Aன் கீழ் குற்றவாளி இல்லை** என தீர்மானித்து **கு.வி.மு.ச 248(1)ன்** கீழாக விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

16. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூன் மாதம் 17ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.17 17:01:58 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**

இணைப்பு:

அரசு தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.சாவித்திரி. | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.தேவராஜ். | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.தம்பிகலையன் (எ) சேகர். | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.குப்புசாமி | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | திரு.கிருஷ்ணமூர்த்தி | காவல் ஆய்வாளர். |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| அ.சா. ஆ.எண். | தேதி | சான்றாவணங்கள் | யாரால் குறியீடு செய்யப்பட்டுள்ளது. | குறிப்பு |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 23.10.2023 | புகார் வாக்குமூலம். | அ.சா.1 | அசல் |
| அ.சா.ஆ.2 | 23.10.2023 | பார்வை மகஜர். | அ.சா.4 | அசல் |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.3 | 23.10.2023 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.4 | 23.10.2023 | மாதிரி வரைபடம். | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.5 | 30.10.2023 | பிரேத விசாரணை அறிக்கை. | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.6 | 10.11.2023 | TN 65 C 1902 என்ற மோட்டார் வாகன ஆய்வறிக்கை. | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.7 | 10.11.2023 | TN 39 J 5220 என்ற TVS இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை. | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.8 | 22.10.2023 | விபத்து பதிவேடு | அ.சா.5 | நகல் |
| அ.சா.ஆ.9 | 30.10.2023 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.10 | 23.10.2023 | காயச்சான்று | அ.சா.5 | அசல் |

அரசு தரப்பு சான்றுபொருட்கள்: – இல்லை –

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:– – இல்லை –

குறிப்பு:

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிக்கு தெரிவிக்கப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.17 17:02:04 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**